1991 சனவரி 25]

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு உதவி பெறும் தனியார் பள்ளி ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்து வருவது குறித்து.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு உதவி பெறுகிற தனியார் பள்ளிகளில் வேலை பார்க்கிற ஆசிரியர்கள் கடந்த ஒரு வார காலத்திற்கு மேலாக தொடர்ந்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு அந்தத் தனியார் பள்ளிகளெல்லாம் இன்றைக்கு மூடப்பட்ட நிலையிலே இருக்கின்றன. அதிலே பணிபுரிகின்ற பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் 10 ஆண்டுக் காலம், 13 ஆண்டுக் காலமாக ஊதியம் எதையும் கூடப் பெறாமல், ஊதியம் இல்லாமலேயே பணி புரிந்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பல ஆண்டுக் காலமாக ஊதியம் வாங்காமல் பணி புரிந்து கொண்டிருந்த ஆசிரியர்கள் எல்லாம் எங்களுக்கு ஊதியம் வேண்டும், அதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்சினையை நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அதிலே அரசு உடனடியாகத் தலையிட்டு, அந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை ஒரு முடிவிற்குக் கொண்டு வருவதற்கும், நீண்ட காலமாக ஊதியம் இல்லாமல் பணிபுரிகின்ற அந்த ஆசிரியர்களுக்கு ஊதியம் கிடைக்கவும் ஒரு உத்திரவாதமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நன்றி.

***மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தச் செய்தி அரசினுடைய கவனத்திற்கு நேற்றைக்கு முன் தினம் வந்திருக்கிறது. இருந்தாலும், இந்தப் பிரச்சினை அரசுக்கும், ஆசிரியர்களுக்கும் இடையே உள்ள ஒரு பிரச்சினை அல்ல. நிர்வாகம், சிறுபான்மைப் பள்ளிகள் என்ற பெயரால் பல வகுப்புகளைத் தொடங்குவதற்கும், பள்ளிகளைத் தொடங்குவதற்கும் அங்கீகாரம் கேட்கிறபோது அரசு நிதி வழங்குகிற பொறுப்பை ஏற்றுக் கொள்ளாமலேயே கூட அங்கீகாரம் வழங்குவது, அந்தச் சிறுபான்மைப் பள்ளிகள் இயங்க விரும்புகிற அந்த நோக்கத்திற்குத் துணையாக இருப்பது என்ற முறையில் அங்கீகாரத்தை வழங்கியிருக்கிறார்கள்.

ஏற்கெனவே உள்ள 1973-வது ஆண்டு சட்டத்தின்படியும் கூட, தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் வரன்முறைப்படுத்தும் சட்டத்தின்படி அந்தப் பள்ளிகள் இயங்குவதற்கு அனுமதி வழங்குகிற கடமை, முறையைச் சரிபார்த்து வழங்குகிற கடமை அரசுக்கு இருக்கிறது. ஆனால் அப்படி அங்கீகாரம் வழங்கப்பட்டாலே நிதி உதவிக்குத் தகுதி உள்ளனவாகக் கருத இயலாது எனவும், நிதி உதவி மானிய வழி வகைகளைப் பொறுத்தும், மானியம் வழங்குகிற வசதிகளைப் பொறுத்தும் அரசால் வழங்கப்படும் எனவும் அப்பொழுதே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் அப்படி அங்கீகரிக்கப்படுகிற சிறுபான்மைப் பள்ளிகளில் ஏறத்தாழ 100-க்கும் மேற்பட்ட சிறுபான்மைப் பள்ளிகள் சென்னை உயர்நீதி மன்றத்திலே வழக்குத் தொடுத்து, அந்த வழக்கு சில காலம் நடைபெற்று, இடைக்கால உத்திரவுகள் பெறப்பட்டு, இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்டு, அதன் மூலமாக, சிறுபான்மைப் பள்ளிகளை நடத்திய அல்லது அப்படி சிறுபான்மை என்ற பெயரால் நடத்தப்பட்ட பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுடைய தகுதிகளுக்கு உரிய ஊதியத்தை வழங்க வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி விட்டது. உயர்நீதி மன்றம் அந்தத் தீர்ப்பு வழங்கியதன் மூலமாக யார் சிறுபான்மை என்ற பெயரால், பள்ளிக்கூடம் நடத்த விரும்பினாலும், நாளைக்கு அரசு நிதி வழங்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு இக்கட்டான நிலை அரசுக்கு ஏற்பட்டதன் காரணமாக, அதுவும் ஒரு 10, 12 ஆண்டுக்கால நடைமுறைகளின் விளைவாக அவ்வளவு பொறுப்பையும் அரசு ஏற்றுக் கொள்ள வேண்டிய நடைமுறையின் காரணமாக உச்ச நீதிமன்றத்தில் இதற்கான மறு விண்ணப்பம், அப்பீல் செய்யப்பட்டு இருக்கிறது. 12—12—1990-ல் மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது. அது பற்றிய முடிவு உச்ச நீதிமன்றத்திலே கிடைத்ததற்குப் பின்னர்தான் அரசு எந்த வகையிலேயும் முடிவு எடுக்க முடியும். ஆனால் நிர்வாகம் ஆசிரியர்களை வேலைக்கு ஈடுபடுத்திய காரணத்தினால், அவர்களுக்கு அந்த நிர்வாகம் எந்த ஊதியத்தைத் தரச் சம்மதித்து அவர்களை வேலையில் ஈடுபடுத்தியதோ அந்த ஊதியத்தை வழங்க அந்த நிர்வாகத்தினர் கடமைப்பட்டுள்ளனர் என்பதை இந்த அவையின் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

10-10 மணி

(இ) பேரவைத் தலைவர் தீர்ப்புப்பற்றி உள்நோக்கம் கற்பித்து சில பத்திரிகைகளில் வந்துள்ள செய்தி குறித்து.

திரு. எம். அப்துல் லத்திப் : பேரவைத் தலைவர் அவர்களே, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதைப் போல இந்த அவையினுடைய கண்ணியத்தைக் குறித்தும், தங்களுடைய தனித் தன்மை, தனி அந்தஸ்தைக் கேள்விக் குறியாக்கும் வகையிலும் சில செய்திகள் பத்திரிகையில் வந்திருப்பது வேதனைக்குரிய ஒன்று. அதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது எங்களுடைய கடமை என்ற வகையிலேதான் இந்தப் பிரச்சினையை நான் எழுப்புகிறேன். 'எய்தவன் ஒருவன் இருக்க அம்பை நொந்து பயன் இல்லை' என்ற ஒரு சொற்றொடரோடு, தாங்கள் அளிக்கின்ற தீர்ப்புகளுக்கு, தாங்கள் சுயமாகச் சிந்தித்து அளிக்கின்ற தீர்ப்புகள் அல்ல, யாரோ தங்களை இயக்கி வைக்கிறார்கள். அவர்களுடைய இயக்குதலின்படித் தாங்கள் நடக்கிறீர்கள் என்று குற்றச்சாட்டு சொல்லப்படுவது இந்த அவையில் இடம் பெற்றிருக்கின்ற உறுப்பினர்களுடைய கண்ணியத்திற்கு அது எந்த வகையிலும் செம்மை சேர்க்காது. தமிழக மக்களுடைய பிரதிநிதித்துவ சபையினுடைய ஒரு இறையாண்மையை அது கேள்விக்குறியாக்குகின்ற வகையில் அமைந்திருக்கிறது.